## தமிழ்நாடு அரசு

### சுருக்கம்

தேர்வுகள்-எஸ்.எஸ்.எல்.சி.தேர்வு-பகுதிமுறைத் தேர்வுத்திட்டம்-விளக்கங்கள் வெளியிடப்படுகின்றன.

---

### கல்வித்துறை

அரசாணை(நிலை)எண்.337. நாள். 24.2.81.

1. அரசு ஆணை எண்.133, கல்வி, நாள்.21.1.78.
2. அரசு குறிப்பாணை எண்.17240/வி1/78-1, நாள்.22.2.78.
3. அரசு குறிப்பாணை எண்.28590/வி1/78-3, நாள்.7.7.78.
4. அரசுத்தேர்வுகள் இயக்குநரின் கடித எண்.49/பி1/77, நாள்.3.10.78,5.12.78 மற்றும் 3.11.79.
5. பள்ளிக் கல்விஇயக்குநரின் கடிதம் எண்.253539/டபிள்யூ/15/79, நாள்.11.12.79.

....

ஆணை:-

1978-ம் ஆண்டுக்கு முன்பு எஸ்.எஸ்.எல்.சி.(11 வருடம்) ஏ.ஐ.எஸ்.எல்.சி., ஓ.எஸ்.எல்.சி., முதலிய பரிட்சைக்குச் செல்லும் மாணவர்கள் ஒரே தடவையில் எல்லாப் பாடங்களிலும் குறிப்பிட்ட குறைந்தபட்ச மதிப்பெண்கள் பெற்றிருந்தால்தான் புகுமுக வகுப்பு முதலிய உயர் வகுப்புகளுக்குச் செல்லமுடியும். 1978ம் ஆண்டில் எஸ்.எஸ்.எல்.சி., ஏ.ஐ.எஸ்.எல்.சி., ஓ.எஸ்.எல்.சி.முதலிய பரிட்சைக்கு பகுதிமுறைத் தேர்வுத் திட்டத்தை அரசு நடைமுறைக்குக்கொண்டு வந்தது. அத்திட்டத்தின்படி மார்ச் 1978 தொடங்கி நடத்தப்படும் பரிட்சையில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில் தோல்வியுற்ற மாணவர்கள் 1978 அக்டோபர் மாதம் முதல் நடத்தப்படும் பரிட்சையில் தவறிய பாடங்களை மட்டும் மீண்டும் எழுதி தேர்ச்சி பெறலாம். இவ்விதம் பகுதி முறைத் தேர்வுத் திட்டத்தின் மூலம் பரிட்சை எழுதி எல்லாப் பாடங்களிலும் குறைந்த மதிப்பெண்ணாகிய 35 விழுக்காடு பெற்ற மாணவர்கள் மேல்நிலைப்பள்ளியில் சேர்ந்து படிக்கலாம். இந்த பகுதி முறைத் தேர்வுத்திட்டம் 1978-க்கு முன்பு நடந்த எஸ்.எஸ்.எல்.சி., ஓ.எஸ்.எல்.சி.பரிட்சையில் தோல்வியுற்ற மாணவர்களுக்கு 1977-க்கு முன்பு நடந்த ஏ.ஐ.எஸ்.எல்.சி. பரிட்சையில் தோல்வியுற்ற மாணவர்களுக்கு பின்னர் விரிவுபடுத்தப்பட்டது.

2. மேற்கூறிய இரு ஆணைகளைத் தொடர்ந்து கீழ்க்கண்ட விளக்கங்கள் கோரப்பட்டுள்ளன:-

(1) பகுதிமுறைத் தேர்வுத் திட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னால் அதாவது 1.4.78க்கு முன்னால் நடந்த எஸ்.எஸ்.எல்.சி(11 வருடம்)பரிட்சைகளை பல தடவை எழுதி ஒவ்வொரு பாடங்களிலும் 35 விழுக்காடும் அதற்கு மேலும் மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள் பகுதி முறையில் தேர்வு பெற்றவர்களைப் போல மேல்நிலைப் பள்ளியில் சேரலாமா?

(2) பகுதிமுறைத் தேர்வுத் திட்டப்படி, தேர்வு பெற ஒவ்வொரு பாடத்திலும், 35% மதிப்பெண்கள் பெறவேண்டும். 1.4.78க்கு முன்பு நடந்த எஸ்.எஸ்.எல்.சி.பரிட்சையில் 36 அல்லது 37 விழுக்காடு பெற்றும் தோல்வியுற்ற மாணவர்களை 35 விழுக்காட்டிற்குமேல் பெற்றிருந்த காரணத்தினால் அவர்களை தேர்ச்சியுற்றவர்களாக கருதலாமா?

(அல்லது)

(3) அம்மாணவர்கள் குறிப்பிட்ட பாடங்களைஇப்பொழுது மீண்டும் எழுதி 35 விழுக்காடு பெற வேண்டுமென்று கொள்ளவேண்டுமா?

(4) 1979 அக்டோபருக்குப் பின்அரசு தேர்வுகள் இயக்குநர் எஸ்.எஸ்.எல்.சி.பரிட்சையில் விருப்பப் பாடங்களில் (Electives) தேர்வு நடத்துவதை நிறுத்திவிட்டதால் எஸ்.எஸ்.எல்.சி.யில் விருப்பப் பாடங்களைப் படித்து, பகுதிமுறை பாடத்திட்டம் வந்த பின்பும் தேர்ச்சி அடையாத மாணவர்களின் நிலை என்ன?

3. மேற்குறிப்பிட்டவைகளைப் பற்றி பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் அரசுத்தேர்வுகள் இயக்குநருடன் கலந்து பரிசீலித்து அரசு கீழ்க்கண்டவாறு முடிவெடுத்து ஆணை வெளியிடுகிறது.

1978-ம் ஆண்டிற்கு முன், பல தடவைகளில் பரிட்சை எழுதத் தேவையான மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள் கல்லூரிப் படிப்புக்குச் செல்ல முடியாது. ஆனால் வேலை வாய்ப்புகள் பெறமுடியும். பகுதிமுறைத் தேர்வுத் திட்டம் நடைமுறை வந்த பின்பு எஸ்.எஸ்.எல்.சி. (10 வருடம்)பரிட்சையை பல தடவைகளில் எழுதி தேர்ச்சி பெற்றால் மேல்நிலைப்பள்ளியில் சேரலாம். அதேபோல், பகுதிமுறைத் தேர்வுதிட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு பல தடவைகளில் 11 வருட எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதி தேவையான மதிப்பெண்கள் (35%)ஒவ்வொரு பாடத்திலும் பெற்றிருந்ததால் அம்மாணவர்களும், அந்த தேர்வினில் முழுமையாகத் தேர்ச்சி பெற்றவர்களாகக் கருதி மேல்நிலைப்பள்ளிகளில் சேர அரசு அனுமதிக்கிறது.

1.4.78க்கு முன்பு ஒவ்வொரு பாடங்களிலும் 35 விழுக்காடு அதற்கு மேலும் பெற்று தோல்வியுற்றதாக கருதப்பட்ட மாணவர்கள் மீண்டும் தேர்வு எழுதி 35 விழுக்காடு பெற வேண்டியதில்லை. அத்தகைய மாணவர்கள் அனைவரும் 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி.தேர்வில் தேர்ச்சிப் பெற்றவர்களாக 1.10.78 லிருந்து கருதப்படுவார்கள். பகுதி முறைத்திட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு நடைபெற்ற எஸ்.எஸ்.எல்.சி.தேர்வுகளில் தேர்வு பெறாதவர்கள் பலர் அரசுப் பணியில் ஏற்கனவே சேர்ந்திருப்பார்கள். அவர்கள் ஒவ்வொரு பாடங்களிலும் 35 விழுக்காட்டிற்கு குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருந்தால், 1.10.78 லிருந்து அவர்களும் எஸ்.எஸ்.எல்.சி.தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களாக கருதப்படுவார்கள்.

எஸ்.எஸ்.எல்.சி.யில் விருப்பப் பாடங்களைப் படித்து 1979 அக்டோபருக்குள்விருப்பப்பாடத்தில் தேர்ச்சி பெறாதவர்கள் விருப்பப் பாடத்தினைத் தவிர மற்ற எல்லாப் பாடங்களிலும் 35 விழுக்காடு பெற்றிருக்கும் பட்சத்தில் அம்மாணவர்கள் அனைவரும் 1.10.78லிருந்து எஸ்.எஸ்.எல்.சி.பரிட்சையில் தேர்ச்சி பெற்றவர்களாகக் கருதப்படுவார்கள்.

4. மேலே கண்ட ஆணைகள் பகுதிமுறைத் தேர்வுத் திட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு நடந்த எஸ்.எஸ்.எல்.சி., ஓ.எஸ்.எல்.சி., மற்றும் மெட்ரிக் தேர்வுகள் எழுதி, ஒவ்வொரு பாடத்திலும் 35% மதிப்பெண் பெற்றவர்களுக்கும் பொருந்தும்.

5. மேலே 1,11, 111 மற்றும் பத்தி 4-ல் குறிப்பிட்ட மாணவர்களுக்கு ஏற்கனவே அளிக்கப்பட்ட எஸ்.எஸ்.எல்.சி.சான்றிதழ்கள் திரும்பப் பெற்று அவைகளில் தேர்வுபெற்றதாக குறிப்பு ஏதும் வழங்கப்பட மாட்டாது. அதற்குப் பதிலாக அத்தகைய மாணவர்கள் அனைவரும் 11-ம் ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி.தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களாகக் கருதப்படுவார்கள் என்ற ஒரு பொது அறிவிப்பு தமிழ்நாடு கெஜட்டின் மூலம் வெளியிடப்படும்.

6. இவ்வாணை பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை ஒப்புதலோடு வெளியிடப்படுகிறது. (பணி மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையில் அ.சா.கு.எண்.95698/80,நாள்.27.11.80).

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒம்/- செ.ராம்தாஸ்,
ஆணையர் மற்றும் அரசுச் செயலர்.

பெறுநர்

அரசுத்தேர்வுகள் இயக்குநர்,சென்னை.

/உத்தரவின்படி/அனுப்பப்படுகிறது/

ஒம்/- பிரிவு அலுவலர்.

//உண்மை நகல்//

நக.1/8.